18-19

# நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் அறிக்கை

# 18.01.19 - 24.01.19

ST JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN HOSUR 635 126

## நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம்

## முதல் நாள்

**வெள்ளிக்கிழமை** 18.01.2019

காலை சுமார் 9 மணியளவில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் துவங்கப்பட்டது. மாணவியிர் 100 பேருடன் எம் கல்லூரி செயலாளரும் முதல்வருமான **அருட்சகோதரி இ. ஆரோக்கியராணி** அவர்கள் தலைமையில் திட்ட அலுவலர்கள் **திருமதி. ரா. செ. காருண்யா, திருமதி. து. புவனா** ஆகியோருடன் **பேகேப்பள்ளி** என்னும் கிராமத்திற்கு கல்லூரி பேருந்தில் சென்றோம்.

காலை 11.30 மணியளவில் அங்கு உள்ள பஞ்சாயத்து சேவை மையத்தில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமின் துவக்க விழா இனிதே ஆரம்பிக்கப்பட்டது.

இம்முகாமின் சிறப்பு விருந்தினராக **Dr. P. பிரகாஷ் NSS – Co-ordinator,** கணிதத்துறை பேராசிரியர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -11 அவர்கள் மாணவிகளுக்கு நாட்டு நலப்பணித் திட்டம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் மிகச்சிறப்பாக உரையாற்றி உற்சாகப்படுத்தினார்.

மேலும் சிறப்பு விருந்தினராக **மஞ்சுநாத் ரெட்டி, பஞ்சாயத்து தலைவர் விமல் ரவிக்குமார்,BDO Officer, ஆயிஷா மற்றும் ராஜசேகர்** RD Department அவர்கள் பங்கேற்றனர்.


ஆயிஷா மற்றும் ராஜசேகர் **'பாலிதீன் ஒழிப்போம்'** என்ற தலைப்பில் பாலிதீன் உபயோகிப்பதால் ஏற்படும் தீமைகள் பற்றியும் , சுற்றுச்சுழல் மாசுபடுவது பற்றியும் உரையாற்றினார்கள்.

மதிய உணவிற்கு பிறகு 100 மாணவியர்களை 8 குழுக்களாக பிரிக்கப்பட்டு முகாம் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.


8 குழு மாணவிகளும் BDO Officer மற்றும் பஞ்சாயத்து செயலாளர் முருகேசன் ரெட்டி அவர்களின் தலைமையில் பேகேப்பள்ளியின் அங்காடிகளுக்கு சென்று பாலிதீன் பை உள்ளதா என ஆய்வுகளை மேற்கொண்டனர்.


ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126





ST JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126









ST JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126









ST JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126

இரண்டாம் நாள்

சனிக்கிழமை 19.01.2019


காலை 9.00 மணியளவில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் தொடங்கப்பட்டது. 8 குழுக்களும் தங்களது பணியை மேற்கொண்டனர்.

அன்று பேராசிரியர் **திருமதி. வியானி ஜெனிட்டா மேரி** அவர்கள் மனவளக்கலை என்ற தலைப்பில் மனதில் எவ்வாறு நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை பற்றியும், தன்னம்பிக்கை பற்றியும் எடுத்துக் கூறி, மாணவிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

மேலும் யோகா செய்வதன் மூலம் அடையும் பயன்கள் பற்றியும் சில மாணவிகளுக்கு பயிற்சி கொடுத்து சூரிய நமஸ்காரம் செய்து காட்டினார்.

12 மணியளவில் **திருமதி. ராதா சமூக சேவகி** அவர்கள் **"பெண்கள் முன்னேற்றம்"** என்ற தலைப்பில் பெண்களின் சிறப்பைப் பற்றியும் குழந்தைத் திருமணம் ஒழிப்பு பற்றியும் தன் கருத்துக்களை மாணவிகளுடன் பகிர்ந்துக் கொண்டார்.

மதிய உணவிற்கு பின்பு பேகேப்பள்ளியில் உள்ள தெருக்களில் உள்ள பாலிதீன் பைகளை எடுத்து தீ வைத்து சுத்தம் செய்தனர்.




COLLEGE OF ARTS & SCIENCE FOR
HOSUR
635126

மூன்றாம் நாள்

ஞாயிற்றுக்கிழமை

20.01.2019

மரக்கன்று நடுதல்

காலை 9.00 மணி அளவில் பணிகள் மாணவியர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து செயலாளர் **"திரு. முருகேஷ் ரெட்டி"** அவர்களின் தலைமையில் மரக்கன்று நடுதல் நிகழ்வு நடைபெற்றது.

BDO Officer தலைமையில் பாலிதீன் பை ஒழிப்பு சம்மந்தமான பணிகளை மேற்கொண்டனர்.

மேலும் மதிய உணவிற்கு பிறகு மறுநாள் நடக்கவிருக்கும் கண் சிகிச்சை முகாமிற்கு மாணவிகள் வீடு வீடாக சென்று கிராம மக்களுக்கு அழைப்பு விடுத்தனர்.





COLLEGE OF ARTS & SCIENCE FOR W
HOSUR
635 126








ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126

நான்காம் நாள்

திங்கட்கிழமை

21.01.2019

கண்சிகிச்சை முகாம்

காலை 9.00 மணி அளவில் சிறப்பு விருந்தினராக **"சென்ன கிருஷ்ணா Higher Official"** 'விமல் ரவிக்குமார் **BDO officer, 'ஆன்டனி ஜீயார்ஜ்' Health Inspector** ஆகியோர் மாணவிகளுக்கு பல அறிய தகவல்களை பகிர்ந்து கொண்டனர்.


10.30 மணி அளவில் கண் சிகிச்சை முகாம் ஆரம்பமானது. முகாமின் சிறப்புரையாக திரு. எபிநேசர் அமைப்பாளர் அவர்கள் ஆலோசனை வழங்கினர். மேலும் துளசி பார்மஸி குழுவினர் மக்களுக்கு சர்க்கரை அளவு இரத்த அழுத்தம் பற்றி பரிசோதனை செய்தனர்.







ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635 126





St. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126


ஐந்தாம் நாள்

செவ்வாய்கிழமை 22.01.2019

## ஆரோக்கிய ஆனந்தம்

காலை 9.30 அணி அளவில் "ஆரோக்கியம் - ஆனந்தம்" என்ற தலைப்பில் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் பற்றியும் உடல் ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ள சிறந்த உணவு பழக்கங்களையும் எவ்வாறு உண்ண வேண்டும் என்பதையும் சிறந்த உணவுகள் எது என்பதையும் மாணவியருக்கு பயன்தரும் வகையில் ஆற்காட்டைச் சார்ந்த திரு. **HR. சீனிவாசன்** அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

மதிய உணவிற்கு பிறகு மாணவிகள் எட்டு குழுக்களாக பிரிந்து மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றி களப்பணி மேற்கொண்டனர்.





COLLEGE OF ARTS & SCIENCE FOR ...
HOSUR
635 126







HOSUR





HOSUR





ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR
HOSUR
635126

ஆறாம் நாள்

புதன்கிழமை 23.01.2019

## வங்கி மேலாண்மை விழிப்புணர்வு

காலை 9.00 மணி அளவில் வங்கி மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்தும் அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக பேராசிரியர் திருமதி. ரீனா ராஜ் வணிகவியல் துறை அவர்கள் சிறப்புரையாற்றினார்.


மதிய உணவிற்கு பிறகு மாணவிகள் எட்டு குழுக்களாக பிரிந்து மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றி களப்பணி மேற்கொண்டனர்.







ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE
HOSUR
635 126





GE OF ARTS & SCIENCE FOR
HOSUR
635126

# ஏழாம் நாள்

வியாழக்கிழமை 23.01.2019

காலை 10.00 மணியளவில் நாட்டுநலப்பணித் திட்ட சிறப்பு முகாமின் நிறைவு விழா தொடங்கப்பட்டது.

முகாமின் சிறப்பு விருந்தினராக எம் கல்லூரி செயலாளரும் முதல்வரும் ஆகிய அருட்சகோதரி இ. ஆரோக்கியராணி அவர்கள் வாழ்வில் குறிக்கோள்களை முதலில் கனவாக்குங்கள் பிறகு அதனை செயலாக்குங்கள் வெற்றி உங்கள் பின்னால் என்ற கருத்தைக் கூறி அதற்கு எடுத்துக்காட்டாக **Abrahalm Lincoln** வாழ்க்கையைப் பற்றி கூறி மாணவிகளின் மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி சிறப்பாக உரையாற்றினார்.

மேலும் திரு.முருகேஷ் ரெட்டி பஞ்சாயத்து செயலாளர் அவர்கள் உழைப்பின் பெருமையைப் பற்றி சிறப்புரையாற்றினார்.

பின்பு மாணவிகள் கல்லூரி முதல்வர் மற்றும் பஞ்சாயத்து செயலாளர் அவர்களின் முன்னிலையில் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தினர். மேலும் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நாட்டுப் பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.







HOSUR 635 126





ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126









ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126






S. Arockiarani

Signature of the Programme Officer

Signature of the Principal

PRINCIPAL
ST. JOSEPH'S COLLEGE OF ARTS
& SCIENCE FOR WOMEN,
Mookandapalli, Sipcot,
HOSUR - 635126, Krishnagiri-Dist.

1. R.S. Karunya [R.S. KARUNYA]

2. D.Bhuvana [D. BHUVANA]

ST. JOSEPH'S COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
HOSUR
635126